தனி மனிதர்களின் சுய மரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால்

மாநிலங்கள் சுயமரியாதைக்காக எழுந்து நிற்க வேண்டும்!

வைக்கம் நூற்றாண்டு நிறைவு விழாவில் – கேரள முதல்வர் பினராயி விஜயன் வலியுறுத்தல்!

வைக்கம், டிச.14

“தனி மனிதர்களின் சுய மரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால் மாநிலங்கள் சுயமரியாதைக்காக எழுந்து நிற்க வேண்டும்” என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் வலியுறுத்தினார்,

வைக்கம் கடற்கரையில் தந்தை பெரியார் நினைவிடம் மற்றும் பெரியார் நூலகம் திறப்பு விழாவுக்கு முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் தலைமை வகித்துப் பேசியதாவது: -

ஒத்துழைப்பு என்பது வார்த்தைகளில் அல்ல, செயலில் வெளிப்படுகிறது. பொருளாதார சுயாட்சி உள்ளிட்ட மாநிலங்களின் உரிமைகள் மீது தொடர்ந்து அத்துமீறல் நடந்து வரும் இந்த நிலையில் மேலும் பல மாநிலங்களுக்கு இடையே இந்த ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும். வைக்கம் சத்தியாகிரகத்தில் எல்லை கடந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் பார்த்தோம்.

கேரளாவும் தமிழகமும் அந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் தொடர்கின்றன. தனிமனிதர்களின் சுயமரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால், அவர்களின் சுயமரியாதைக்காக மாநிலங்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று காலம் கோருகிறது. காலம் கோரும் ஒத்துழைப்பை கேரளாவும் தமிழகமும் முன்னெடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

அதே ஒத்துழைப்பின் மனப்பான்மை பெரியார் நினைவிடத்தைப் புதுப்பிப்பதிலும் தெரிகிறது. வரும் காலங்களில் இரு மாநிலங்களும் அதை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெரியார் என்கிற ஈ.வெ.ராமசாமி அவர்கள், இந்தியா முழுவதும் உள்ள சமூக சீர்திருத்தவாதிகளில் முன்னணியில் இருப்பவர். ஸ்ரீ நாராயணரை கேரள மக்கள் அனைவரும் குரு என்று அழைப்பது போல, ஈ.வெ.ரா.வை தமிழர்கள் அனைவரும் பெரியார் என்று மரியாதையுடன் அழைக்கிறார்கள்.

வைக்கம் மகாதேவர் கோவிலை சுற்றியுள்ள பாதைகளில் அவர்கள் நடக்க வேண்டும் என்ற சத்தியாகிரகத்தில் பெரியார் முக்கிய பங்கு வகித்தார். பெரியாரும் பிற தலைவர்களும் நடமாடும் சுதந்திரம் மறுக்கப்பட்டதை மலையாளிகள் மட்டுமல்ல நாட்டு மக்களின் பிரச்சனையாகவே பார்த்தார்கள்.

1924 ஏப்ரல் 13, அன்று வைக்கம் சத்தியாகிரகத்திற்கு பெரியார் தலைமை ஏற்றார். இதனால் வைக்கத்தில் மக்கள் கடல் போல் திரண்டனர். திருவிதாங்கூர் நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில், அவர் கைது செய்யப்பட்டு ஆறுக்குற்றி சிறையில் அடைக்கப்பட்டார். தகவல் அறிந்ததும் அவரது மனைவி நாகம்மா வைக்கம் வந்தார். பெண்கள் பங்கேற்புடன் சத்தியாகிரகத்தின் முக்கியத்துவம் குறித்து பிரச்சாரம் செய்தார்.

பெண்களின் திருமண வயதை உயர்த்தவும், அவர்கள் தங்கள் கணவரைத் தேர்வு செய்யவும் விவாகரத்து செய்யவும் உரிமை பெற்றதில் பெரியாரின் தலையீடுகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பெரியாரின் இது போன்ற அனைத்து ஈடுபாடுகளிலும் நாகம்மாவும் சமமான பங்கேற்பாளராக இருந்தார்.

தன்னலமற்ற தலைமை பெரியார்!

ஆறுக்குற்றி சிறையில் இருந்து வெளியே வந்த பெரியார் மீண்டும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதால், அவரை நாடு கடத்த அரசு உத்தரவிட்டது. பெரியார் உத்தரவை மீறியதால், திருவிதாங்கூர் நிர்வாகம் அவரை மீண்டும் சிறையில் அடைத்தது. மன்னர் இறந்த சந்தர்ப்பத்தில் பெரியாரும் பிற சத்தியாக்கிரகிகளும் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு வைக்கம் சத்தியாகிரகத்திற்கு தன்னலமற்ற தலைமையை பெரியார் வழங்கினார்.

இவ்வாறு முதல்வர் பினராயி விஜயன் அவர்கள் பேசினார்.

இன்னும் ஒரு மாத காலத்தில் பணிகள் முடிக்கப்பட்டு

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பயன்பாட்டுக்கு வரும்!

பேரவையில் – கழக உறுப்பினர் துரை. சந்திரசேகரன் கேள்விக்கு – அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, டிச. 14-

இன்னும் ஒரு மாத காலத்தில் பணிகள் முடிக்கப்பட்டு கொள்ளிடம் குடிநீர்த் திட்டம் மக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் துரை சந்திரசேகரன் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இதுகுறித்து திருவையாறு தொகுதி கழக உறுப்பினர் துரை சந்திரசேகரன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

துரை.சந்திரசேகரன்:-

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா - (அ) திருவையாறு தொகுதி, திருவையாறு, பூதலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 54 ஊராட்சிகளில் செயல்படும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய அரசு முன் வருமா? (ஆ) ஆம் எனில், எப்போது?

அமைச்சர் கே.என். நேரு: (அ) மற்றும் (ஆ) திருத்திய விடையைத் தருவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திருவையாறு தொகுதி, திருவையாறு பூதலூர், தஞ்சாவூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 54 ஊராட்சிகளில் இயங்கும் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மறுசீரமைப்பு செய்து நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் 14.78 MLD குடிநீர் வழங்குவதற்கு ரூ.248.67 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சுமார் 95 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதர பணிகள் ஜனவரி 25க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துரை. சந்திரசேகரன்: இந்த வினா 2021 ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட வினா. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த போது கொடுத்த திட்டம். என்னுடைய திருவையாறு தொகுதியில் 54 ஊராட்சிகள் இந்தத் திட்டத்தின் மூலமாக குடிநீர் வசதி பெற்றாலும், வளர்ந்துவரும் மக்கள்தொகை, பெருகிவரும் குடியிருப்புப் பகுதிகளினாலும், அதே போல் கொள்ளிடம் ஆற்றில் ஆழ்துளைக் குழாயில் போதிய நீர் வராத காரணத்தினாலும் தான் இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டுமென்று இந்த அரசு அமைந்தவுடன், முதலமைச்சர் அவர்களிடமும், நகராட்சித் துறை அமைச்சர் அவர்களிடமும் கோரிக்கை வைத்தோம். அதனடிப்படையில் இன்றைக்கு 90 சதவீதத்திற்கு மேலான பணிகள் நிறை வுற்று, மிக விரைவிலே மக்கள் பயன்பாட்டுக்கு வர இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பதற்காக, முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் கூடுதலாக, அந்த திருவையாறு ஊராட்சியில் 26 ஊராட்சிகளும், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் 15 ஊராட்சிகளும் விடுபட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி வருகிறது. அங்கு பரிசோதனை செய்ததில் நீரின் காரத்தன்மை 750 மில்லிகிராம் இருக்கின்றது. எனவே, அங்கு வசிக்கும் பொதுமக்கள் அதிகமாக சிறுநீரகப் பிரச்சினையால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, புதிய கூட்டுக் குடிநீர்த்திட்டத்தை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: ஒரு திட்டம் துவங்கப்படுகின்ற போது, ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த குழாய்கள் பழுதுபட்டிருந்தால் அந்த குழாய்களையும் சரி செய்து, அவர்களுக்கும், அதே நேரத்தில் புதிய திட்டத்தின்மூலமாக விடுபட்ட மக்களுக்கும் கொண்டு சேர்க்கத்தான் புதிய திட்டமே கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த தஞ்சை ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற பகுதியும், பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற விடுபட்ட பகுதிகளையும் இதில் இணைத்து இப்போதே அந்தத் திட்டத்திலே அப்பகுதிகளையும் சேர்க்க முடியுமானால், அவர்களுக்கும் சேர்த்து தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இன்னும் ஒரே மாதகாலத்தில் அந்த பகுதியில் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

துரை. சந்திரசேகரன்: நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த அரசு அமைந்தவுடன் எத்தனை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை அறிவதாடு, கொள்ளிடம் ஆற்றிலும், காவேரி ஆற்றிலும் நீங்கள் பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஆழ்துளைக் குழாய் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒருகாலத்தில், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் திருவையாறு பகுதியில் 15 அடியில் நிலத்தடி நீர் இருந்தது. இன்றைக்கு 150 அடிக்குகீழ் நிலத்தடி நீர் சென்று விட்டது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நிலத்தடி நீர் செறிவு என்பது அவசியமான ஒன்று. எனவே, கொள்ளிடம் மற்றும் காவேரியில் ஆங்காங்கு தடுப்பணைகள் அமைத்தால்தான், எதிர்காலத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சிறப்பாக இயங்கும். அதுமட்டுமல்லாது, விவ சாயிகள் பாதிக்கப்படாமல், pumpset விவசாயிகள் நடைமுறைப்படுத்தப்படுவார்கள். திரு என்னுடைய தொகுதியில்கூட, விஷ்ணம்பேட்டை என்ற கிராமத்தில், கொள்ளிடத்தில் ஒரு படுகை அணை கட்டுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்பணிகள் தற்போது கிடப்பில் போடப்பட்டுள்ளன. எனவே, அப்பணிக்கு முன்னுரிமை கொடுத்து அமைப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது 100 சதவீதம் ஏற்றுக்கொள்ளக்கூடியது. ஏனென்றால், தமிழ்நாட்டில் குடிநீர் வழங்குகின்ற பணியிலே காவேரியிலும், கொள்ளிடத்திலும் மட்டுமே 248 இடங்களிலே தண்ணீர் எடுக்கப்பட்டு, நாடு முழுவதும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதிலே தடுப்பணை அமைக்கும் போது, ஆங்காங்கு barrages அமைக்கின்ற போதும் சரி, இன்றைக்கு மாயனூரில் தடுப்பணை அமைத்திருக்கின்ற போதும் சரி, காவேரியிலே நம்முடைய கலைஞர் அவர்கள் கம்பரசம்பேட்டை அமைத்துள்ள தடுப்பணையிலும் சரி, பக்கத்தில் இருக்கிற கிராமங்களிலெல்லாம் நிலத்தடி நீர் உயர்ந்து வந்திருக்கின்றது. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களிடம் இதுபற்றி பேசியிருக்கிறோம். நிதிநிலைமைக்கேற்ப அப்பணியை மேற்கொள்ளலாம் என்று முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளபடி செய்தால் இன்னும் 100 ஆண்டுகாலத்திற்கும் கூட எந்தத் தண்ணீர் பஞ்சமும் வராது. நீர்வளத் துறை அமைச்சர் அவர்களும் அருகிலே இருக்கிறார். அவரும் இந்தக் கருத்துகளையெல்லாம் கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார். அவர் எங்கள் துறைக்கு அதிகமான நிதியொதுக்கித் தந்தால் முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று செய்து தருகிறேன் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நானும் இது தேவை என்பதை அறிந்து அதை செய்து தருவது குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நீர்வளத் துறையின் மூலமாக அப்பணிகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

திருச்சியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த தொடர் மழை காரணமாக மாநகரில் குறிப்பாக கிராப்பட்டி அன்பு நகர், அருணாச்சலம் நகர், கிருஷ்ணமூர்த்தி நகர், சக்தி விநாயகர் கோயில் தெரு, டி.எஸ் நகர், உறையூர், லிங்கா நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது. இந்த தகவல் அறிந்த நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளை பார்வையிட்ட பின் உடனடியாக மழைநீர் வெளியேற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், நகர பொறியாளர் சிவபாதம், மாமன்ற உறுப்பினர்கள் கவிதா செல்வம், முத்து செல்வம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்..

பொங்கல் பண்டிகையையொட்டி

‘கூட்டுறவுப் பொங்கல்’ என்ற பெயரில் மளிகைப் பொருட்கள் விற்பனை!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை -டிச. 14-

பொங்கல் பண்டிகையையொட்டி பொதுமக்களுக்கு கூட்டுறவு பொங்கல் என்ற பெயரில் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கூட்டுறவு பொங்கல் என்ற பெயரில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களான நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பிரதம கூட்டுறவு பண்டகசாலைகள், கூட்டுறவு விற்பனைச் சங்கம், சுய சேவை பிரிவுகள், சில்லறை விற்பனை நிலையங்கள் போன்ற அனைத்து விற்பனை அலகுகள் மூலம் மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு விற்பனை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிப்பு பொங்கல் தொகுப்பு 199 ரூபாய்க்கும், சிறப்பு பொங்கல் தொகுப்பு 499 ரூபாய்க்கும், பெரும் பொங்கல் தொகுப்பு 999 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 199 ரூபாய் இனிப்பு பொங்கல் தொகுப்பில் அரை கிலோ பச்சரிசி, அரை கிலோ பாகு வெல்லம், ஆவின் நெய், முந்திரி உள்ளிட்ட 8 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேப்போல் 499 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ள சிறப்பு பொங்கல் தொகுப்பில் சர்க்கரை, துவரம்பருப்பு, மிளகாய், தனியா, புளி, செக்கு கடலை எண்ணெய் உள்ளிட்ட 20 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 999 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட உள்ள பெரும் பொங்கல் தொகுப்பில் சர்க்கரை, வரகு, சாமை, திணை, ரவை, ராகிமாவு, கோதுமை மாவு என 35 பொருட்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வித் துறையின் மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள - 11 அரசு

பொறியியல் கல்லூரிகளில் புதிய நவீன ஆய்வகங்கள் அமைக்க ரூ.12.38 கோடி நிதி!

அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் தகவல்!

சென்னை, டிச. 14 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பல்வேறு முத்தான திட்டங்கள் வகுத்து கொடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கடந்த 2024-2025 ஆம் ஆண்டின் உயர்கல்வித்துறை மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் படி மாநிலத்தில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் புதியநவீன ஆய்வகங்களை அமைக்க தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிதிஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள்.

மாணாக்கர்கள், பொருட்களின் இணைய பயன்பாடுகள் மற்றும் பிற மேம்பட்ட உட்பொதிக்கப்பட்ட அமைப்பு அடிப்படையிலான திட்டத்தை உருவாக்க காரைக்குடி மற்றும் போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் உள்ள 2 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருட்களின் இணைய ஆய்வகம் (Internet of Things Laboratory) அமைக்கதலா ரூ.92,10,000 வீதம் மொத்தம் ரூ.1,84,20,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் பொருள் சேர்உற்பத்தி ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,16,00,000 வீதம், மொத்தம் ரூ.3,48,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருள்சேர் உற்பத்தியானது (Additive Manufacturing) பொருள் கழிவுகள், சரக்கு மற்றும் பல்வேறு வகையான தொகுப்பு செயல்பாடுகளை குறைக்க உறுதியளிக்கிறது. இந்த மையம் தொழில் துறை, அரசு மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்து ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஒருங்கிணைத்து நிலையான தயாரிப்புகளுக்கான மேம்பாடு, குறைந்த செலவில் அதிக உற்பத்தித்திறனைக் கொண்டிருப்பது, தொடர்புடைய கல்விமற்றும் பயிற்சியை ஆதரிப்பது மற்றும் பல நோக்கங்களைக்கொண்டுள்ளதாகும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் தொழில்நுட்ப ஆய்வகங்கள்,மாணாக்கர்களின் திறமைகளை வளர்ப்பதிலும், திறமையான மனிதவளத்தினை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே கோயம்புத்தூர், சேலம் மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பொறியியல் கல்லூரிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திரனியல் ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,31,87,975 வீதம் மொத்தம் ரூ.3,95,63,926நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம், மாணாக்கர்களுக்கு பல விதமான பயிற்சி திட்டங்கள், பட்டறைகள் (Workshops) மற்றும் படிப்புகளை வழங்கும்.

மின்சார வாகன வடிவமைப்பு மற்றும் மேம்பாடு, மோட்டார் மற்றும் மோட்டார் கட்டுப்பாடு, மின்சார வாகன மின்கலன்கள் மற்றும் மின்கல மேலாண்மை அமைப்புகள், மின்னேற்றி, உட்பொதிக்கப்பட்ட அமைப்புகள், பொருட்களின் இணையம் மற்றும் தானியங்கி வாகன மின்னணுவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை துரிதப்படுத்த, திருநெல்வேலி, தருமபுரி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 3அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் அமைக்க தலா ரூ.1,03,33,910 வீதம், மொத்தம் ரூ.3,10,01,730 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது,

இதன்மூலம்தமிழ்நாட்டில் உள்ள 11 அரசு பொறியியல் கல்லூரிகளில் அப்பகுதியில் உள்ள மாணவர்களின் தேவையினை பூர்த்தி செய்ய இந்த புதிய நவீன ஆய்வகங்கள் அமையும் என்பதில் ஐய்யமில்லை. இவற்றை அமைக்க மொத்தம் ரூ.12.38 கோடி நிதி ஒதுக்கி தமிழ்நாடு அரசு அரசாணைகள் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நாகூர் நகரில் அமைந்துள்ள பெருமாள் குளத்தைப் பார்வையிட்டு, கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள பெருமாள் கோவில் வடக்கு தெருவிலும் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளூர் ஷாநவாஸ், நாகை மாலி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.